1983 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அண்ட் (ஆ) கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு 40,000 வீடுகள் கட்ட ரூ. 12.80கோடி தேவைப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1982–83-ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அரசு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

1. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு—

(அ) கடன்	150.00
(ஆ) பங்கு மூலதனம்	200.00
(இ) முதலீட்டு மானியம்	450.00

ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் பொதுக் காப்புறுதி கழகங்களிடமிருந்து அரசு ரூ. 350 இலட்சத்தை 1982–83-ஆம் ஆண்டு கடனாக எதிர்பார்க்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் 30–9–1982 தேதிவரை அரசு கீழ்க்கண்ட வண்ணம் நிதியினை வழங்கியுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

1. கடன்	123.72
2. பங்கு மூலதனம்	200.00
3. முதலீட்டு மானியம்	293.26

அரசு தனது நிதியிலிருந்து தேவைக்கேற்ப பணத்தை ஒதுக்கீடு செய்வதால் காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

(முற்பகல் 9-40)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது பல கோடிக்கணக்கான ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி கொடுத்திருந்தாலும் கூட கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் இரண்டாவது இன்ஸ்டால்மெண்ட் வரவில்லை. மூன்றாவது இன்ஸ்டால்மெண்ட் வரவில்லை என்று நான்கு, ஐந்து ஆண்டுகளாக அப்படியே இருப்பதாக மிகவும் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் இவைகளை மாற்றக்கூடிய அளவிற்கு, அரை குறையாக கட்டியிருக்கிற வீடுகளை அவர்கள் கட்டிமுடிப்பதற்கு அரசாங்கம் பணம் கொடுப்பதற்கு த்க்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1983 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரைகுறையாக வீடுகள் ஏன் நிற்கின்றன என்ற தகவல்கள் அவ்வப்போது, கிராம வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகத் தெரிவிக்கப்படுமானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். நானே அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை அரைகுறையாக கட்டிமுடிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறேனே, அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அவர்கள் கொடுக்கிற மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும், ஆவன செய்யவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் வீடு கட்டுகிற திட்டம் ஒவ்வொரு தாலுக்காவிலும் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் எந்தவிதமான போர்டும் இல்லாமல், ஒரு தனி அதிகாரியின் மூலம் இயங்கி வருகிறது. சென்ற ஆண்டு கொடுத்த மனுக்களை எல்லாம், எல்.ஐ.சி லோனில் தாமதம் அல்லது வரவில்லை என்று சொல்லி மனுக்களை திரும்ப மனுதாரர்களிடமே கொடுத்து விடுங்கள் என்ற மாநில சங்கம் உத்தரவிட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அரசாங்கம் ஒரு கோடி கடன், 2 கோடி மூலதனம் தொகை கொடுத்திருக்கிறது. அதை விட்டு விட்டு ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 10 கோடி ரூபாயாவது வீடு கட்டுகிற திட்டத்திற்கு பட்ஜெட்டிலே ஒதுக்கி கிராம வீடு கட்டுகிற திட்டத்தில் வீடுகளை சரியாக சீராக கட்டுவதற்கு உரிய உதவிகளை அரசாங்கம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆண்டிற்கு 40 ஆயிரம் வீடுகள் ; ஐந்தாண்டிற்கு 2 லட்சம் வீடுகள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்று கணக்கிட்டு பணியாற்றிக் கொண்டு வருகிறோம். இதில் கிராம வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு கடன் தொகையில் 1,000 ரூபாய் மானியமாக வழங்குவதால் அரசிற்கு